(61 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

இணைப்பு

இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

தமிழ்நாடு அரசு 2003 ஆம் ஆண்டு நிதிநிலைப் பொறுப்புடைமை சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் பன்னிரண்டாவது நிதிக் குழுவினால் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப பின்னர் திருத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் 3(1) பிரிவின்படி, மாநில அரசு வரவு-செலவுத் திட்ட அறிக்கையுடன் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றை சட்டப் பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின் 3(2) பிரிவின்படி, நிதிநிலைக் குறியீடுகளான, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகியவை குறித்த தொடர் ஆண்டுகளுக்கான இலக்குகளைக் குறிப்பிட்டு, இக்கணிப்புகளுக்கான அனுமானங்களை விளக்கி இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி, நடப்பு நிதிநிலைப் போக்குகளையும், அரசு மேற்கொண்டுள்ள கொள்கை முடிவுகளையும் கருத்தில் கொண்டு, 2010-2013 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிநிலை பற்றிய கணிப்புகளை உள்ளடக்கிய இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் தயாரிக்கப்பட்டு இந்தப் பேரவைமுன் வைக்கப்படுகிறது. இத்துடன் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை, 2010-2013 ஆண்டுக் காலத்திற்கான இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தைக் காட்டுகிறது.

நோக்கங்கள்

2. பொருளாதார வளர்ச்சி, சமூக நலன் மற்றும் நிதி நிதிநிலையைப் பேணுதல் ஆகியவற்றிற்கு சம முக்கியத்துவம் அளித்து, இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வேளாண்மை மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு போன்ற முக்கியத் துறைகளுக்கு தொடர்ந்து அதிக அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பதினொன்றாவது ஐந்தாண்டுத்

[2010 மார்ச் 19

திட்ட இலக்குகள் எய்தப்படும். அதே நேரத்தில், பதின்மூன்றாவது நிதிக் குழு பரிந்துரைத்துள்ளவாறு 2011-2012 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறையை முற்றிலும் நீக்குவதற்கும், நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலை

3. ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியதாலும், அரசின் நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளில் ஏற்பட்டுள்ள உயர்வு மற்றும் புதிய திட்டங்களுக்கான நிதித் தேவை ஆகியவற்றாலும், உலகப் பொருளாதார மந்த நிலையால் வருவாய் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள சரிவாலும் 2009-2010 ஆம் ஆண்டில், ரூபாய் 5,019.54 கோடி வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் ரூபாய் 12,860.45 கோடி நிதிப் பற்றாக்குறை ஏற்படும். வரும் நிதியாண்டிலும் ஊதியக் குழு நிலுவைத் தொகை வழங்கப்பட வேண்டியுள்ளதால், மீண்டும் மாநிலத்தில் ரூபாய் 3,396.45 கோடி வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படும். மேலும், அரசு மூலதனச் செலவினங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யத் திட்டமிட்டுள்ளதால் நிதிப் பற்றாக்குறை ரூபாய் 16,222.13 கோடியாக இருக்கும். நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3.72 சதவீதமாக இருக்கும். இது பதின்மூன்றாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படியே உள்ளது.

4. அரசு தனது கடன் பொறுப்புகளை மிக கவனத்துடன் நிருவகித்து வருகிறது. 31-3-2009 அன்று உள்ளவாறு சேம நல நிதி போன்ற பொறுப்புகளையும் சேர்த்து அரசின் மொத்தக் கடன் ரூபாய் 74,858 கோடியாகும். 2006-2007 முதல் 2008-2009 வரை மூன்றாண்டுகளில் கடன் பொறுப்புகள் ரூபாய் 17,401 கோடியாக அதிகரித்துள்ளது. இதே கால அளவில் மூலதனச் செலவினங்கள் ரூபாய் 22,519 கோடியாக இருந்துள்ளது. திரட்டப்பட்ட கடன் பொறுப்புகள் அனைத்தும் பயன் அளிக்கக்கூடிய நோக்கங்களுக்காகச் செலவிடப்பட்டதை இது காட்டுகிறது. 2009-2010 ஆம் ஆண்டின் இறுதியில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் பொறுப்பு 23 சதவீதமாக இருக்கும்.

2010 மார்ச் 19]

5. மாநிலம் தனது எதிர்பாரா கடன் பொறுப்புகளை முறையாக நிருவகித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவிற்குக் குறைவாகவோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவிற்குக் குறைவாகவோ, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்கு அமையப்பெற வேண்டும். 31-3-2009 அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு மொத்த வருவாய் வரவுகளில் 10 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 1.5 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் (Risk-weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதத்திற்கு மிகாமலோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதத்திலோ, இதில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் இருக்க வேண்டும். 31-3-2009 அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட அரசு உத்தரவாதங்களின் (Risk-weighted guarantees) அளவு, மொத்த வருவாய் வரவுகளில் 2.5 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 0.4 சதவீதமாவும் உள்ளது. பயனளிக்கக்கூடிய திட்டங்களுக்கு மட்டும் உத்தரவாதங்கள் அளிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் அரசு உத்தரவாதங்கள் கட்டுப்படுத்தப்படும்.

எதிர்காலக் கணிப்புகள்

வருவாய்க் கணக்கு வரவுகள்

மத்திய வரிகளில் பங்கு

6. மத்திய அரசின் பகிர்ந்து அளிக்கக்கூடிய நிகர வரி வருவாயில் தமிழக அரசின் பங்கினை 5.305 சதவீதத்திலிருந்து 4.969 சதவீதமாக பதின்மூன்றாவது நிதிக் குழு குறைத்துள்ளது. மத்திய வரிகளில் பங்கு 2010-2011 ஆம் ஆண்டிற்கான மைய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு

ரூபாய் 10,401.69 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளுக்கு 15 சதவீத வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

மாநில அரசின் சொந்த வரி வருவாய்

7. மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதம் 9.5 சதவீதமாக உள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ரூபாய் 41,438.32 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

8. 2010-2011 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், வணிக வரிகளின் வசூல் ரூபாய் 26,851.17 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2009-2010 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடுகளைவிட 15 சதவீத வளர்ச்சியைக் கணக்கில் கொண்டுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டில் 20 சதவீத வளர்ச்சியும் 2012-2013 ஆம் ஆண்டில் 15 சதவீத வளர்ச்சியும் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

9. 2010-2011 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை வரவுகள் ரூபாய் 7,508.18 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2009-2010 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகளைவிட 15 சதவீதம் கூடுதலாகும். பின்வரும் ஆண்டுகளுக்கும் 15 சதவீத அளவில் வளர்ச்சி கருதப்பட்டுள்ளது.

10. பொருளாதார தேக்க நிலையின் விளைவாக முத்திரைத் தாள்கள் மற்றும் பதிவுக் கட்டணங்களின் வசூல் 2009-2010 ஆம் ஆண்டில் பெரும் சரிவைச் சந்தித்துள்ளது. இருப்பினும், இனிவரும் காலத்தில் இந்த இனத்தில் நல்ல வளர்ச்சி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2010-2011 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் முத்திரைத் தாள்கள் மற்றும் பதிவுக் கட்டணங்களின் வசூல் ரூபாய் 4,096.18 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2009-2010 ஆம் ஆண்டில் திருத்த மதிப்பிட்டை விட 20 சதவீத வளர்ச்சியை கணக்கில் கொண்டுள்ளது. அடுத்துவரும்

2010 மார்ச் 19]

ஆண்டுகளில் 15 சதவீத வளர்ச்சி கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

11. வரும் ஆண்டில், மோட்டார் வாகன வரிகள் ரூபாய் 2,396.42 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் ஆண்டுகளுக்கு 15 சதவீத வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

வரி அல்லாத வருவாய்

12. இவ்வினம் 2010-2011 ஆம் ஆண்டில் ரூபாய் 4,101.28 கோடியாகும். வருவாய் வரவுகளில் வரி அல்லாத வருவாயின் பங்கு 6.5 சதவீதமேயாகும். இந்த வருவாய் உயர்வதற்கு அதிக வாய்ப்புகள் இல்லை. மேலும், மாணவர்களின் நலன் கருதி, கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம் ஆகியவற்றை இந்த அரசு இரத்து செய்துள்ளது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, வரும் ஆண்டுகளில் வரி அல்லாத வருவாய் 3 சதவித அளவிற்கே வளரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்

13. 2010-2011 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் ரூபாய் 7,150.45 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு பல்வேறு திட்டப் பணிகளுக்கான உதவித் தொகைகள் மற்றும் பதின்மூன்றாவது நிதிக் குழு பரிந்துரைத்துள்ள உதவித் தொகைகள் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டன.

வருவாய்க் கணக்கில் செலவுகள்

14. 2010-2011 ஆம் ஆண்டிற்கான வருவாய்க் கணக்கு செலவுகள் ரூபாய் 66,488.19 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளன. இது 2009-2010 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளைவிட 12 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது. அரசின் பல்வேறு துறைகளில் உள்ள பணியிடங்களை நிரப்புதல் மற்றும் அரசு அறிமுகப்படுத்தியுள்ள பல்வேறு புதிய நலத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான கூடுதல் செலவுகள் மற்றும் வருமாண்டில் ஆறாவது ஊதியக் குழுவின்

[2010 மார்ச் 19

பரிந்துரைகளால் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தில் ஏற்படக்கூடிய உயர்வு ஆகியவையே இதற்குக் காரணமாகும். வருவாய்க் கணக்குச் செலவுகள் 2011-2012 ஆம் ஆண்டில் 10 சதவீதமாகவும் 2012-2013 ஆம் ஆண்டில் 9 சதவீதமாகவும் உயரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. 2011-2012 ஆம் ஆண்டுடன் ஊதியக் குழு நிலுவைகள் அனைத்தும் கொடுத்து தீர்க்கப்பட்டுவிடும் என்பதால் 2012-2013 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கு செலவுகளின் வளர்ச்சி குறையும் என கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

15. மாநில அரசின் சொந்த வரி வருவாயில் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவுகள் 78 சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த வருவாயில் 51 சதவீதமாகவும் இருக்கும்.

16. மொத்த வருவாய் வரவுகளில் வட்டிச் செலவுகள் 12 சதவீதமாக இருக்கும்.

முடிவு

17. வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை குறித்து மைய அரசால் விதிக்கப்பட்ட அனைத்து இலக்குகளையும் கடந்த நான்கு ஆண்டுகளாக அரசு எய்தியுள்ளது.

18. பதின்மூன்றாவது நிதிக் குழு வகுத்துள்ள திருத்திய நிதி நிர்வாக கொள்கைகளைப் பின்பற்றும் நிலையில் அரசு உள்ளது. 2011-2012 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறையை முற்றிலும் நீக்குவதற்கும் மற்றும் நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தவும் இயலும்.

19. மாநில அரசு, தனது கடன் பளு சமாளிக்கக்கூடிய அளவிற்குள்ளாகவே இருக்கும் வகையில் தொடர்ந்து கண்காணிக்கும். பதின்மூன்றாவது நிதிக் குழு கணித்துள்ளதற்கு உட்பட்டு மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் பொறுப்பு 24 சதவீத அளவில் இருக்கும் என இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது.

2010 மார்ச் 19]

20. வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களுக்கான செலவினங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிதி நிர்வாகத்தில் சிக்கனம் கடைப்பிடிக்கப்படும். *2010-2011* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் முன் எப்போதும் இல்லாத வகையில் சமூகப் பாதுகாப்பு நல உதவிகளுக்கு ரூபாய் *17,858* கோடியும், மூலதனச் செலவினங்களுக்கு ரூபாய் *12,285* கோடியும் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதே இதற்குச் சான்றாக அமையும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 *மார்ச்* 19

அட்டவணை — நடுத்தர

மார்ச் 2010 (1)	2008–2009 கணிப்புகள் (2)	2008–2009 கணக்குகள் (3)	2009–2010 கணிப்புகள் (4)
வருவாய்	49288.85	54653.69	57316.66
மாநிலத்தின் சொந்த வருவாய்	37494.75	39007.87	41377.15
வரி	34706.77	33684.37	38129.51
வரி அல்லாதவை	2787.98	5323.50	3247.64
மத்திய அரசிடமிருந்து பெறப்படுபவை	11794.10	15645.61	15939.51
பங்கிடப்பட்ட வரிகள்	8475.31	8510.80	10921.14
உதவி மானியம்	3318.79	7135.01	5018.37
வட்டியல்லாத செலவு	51502.11	57249.88	62047.64
சம்பளங்கள் (கல்விக்கான அரசின் உதவி உட்பட)	17655.15	15995.26	19741.26
ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும்	7114.76	7719.19	9137.34
ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும்	4717.10	4567.56	5005.60
ஏனைய வருவாய்ச் செலவினங்கள்	9.31	11.19	8.27
உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும்	13892.75	18956.67	17103.71
மூலதன ஒதுக்கீடு	8333.04	9104.30	10497.67
நிகரக் கடன் வழங்கல்	–220.00	895.70	553.79
நிதிக் குறியீடுகள்			
முதன்மை உபரி (+) / பற்றாக்குறை (–)	–2213.26	–2596.20	–4730.98
வட்டி செலுத்துதல்	5800.89	5951.56	6255.35

இவை சரிக்கட்டப்பட்ட எண்கள் என்பதால் இந்த மதிப்பீடுகள் நிதிக்

2010 மார்ச் 19]

கால நிதித் திட்டம் #

தற்போதைய விலையில் ரூபாய் கோடியில்

2009–2010 திருத்த மதிப்பீடு (5)	2010–2011 கணிப்புகள் (6)	2010–2011 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (7)	2011–2012 கணிப்புகள் (8)	2012–2013 கணிப்புகள் (9)
53860.72	63419.01	62515.92	72770.26	82856.78
39366.84	46639.21	44963.78	52942.82	60448.50
35396.33	43400.25	41438.32	49311.60	56708.34
3970.51	3238.96	3525.46	3631.22	3740.16
14493.88	16779.80	17552.14	19827.44	22408.28
8757.78	10233.24	10401.69	11961.94	13756.24
5736.10	6546.56	7150.45	7865.50	8652.05
60016.83	69056.76	71091.30	78825.12	86556.47
19143.81	21623.95	22305.00	24535.50	25589.05
7988.69	10107.62	9894.38	10883.82	11372.20
4981.18	4510.80	4400.15	4840.17	5324.18
6.89	7.13	7.21	7.57	8.02
20055.34	20482.63	21658.87	23824.76	27398.47
8609.12	11582.67	12284.69	14127.39	16246.50
–768.21	741.96	540.99	605.91	618.03
–6156.10	–5637.75	–8575.38	–6054.86	–3699.69
6704.34	6651.19	7646.75	8411.42	9252.56

கணக்குகள் மற்றும் ஆண்டு நிதி விவர அறிக்கையுடன் பொருந்தாது.

[2010 மார்ச் 19

மார்ச் 2010 (1)	2008–2009 கணிப்புகள் (2)	2008–2009 கணக்குகள் (3)	2009–2010 கணிப்புகள் (4)
மொத்த வருவாய் வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் தொகை	11.77%	10.89%	10.91%
வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–)	98.99	1452.25	65.12
மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–) %	0.20%	2.66%	0.11%
நிதி உபரி (+)/பற்றாக்குறை(–)யில் வருவாய் உபரி(+)/பற்றாக்குறை (–)	–1.23%	–16.99%	–0.59%
நிதி உபரி (+) / பற்றாக்குறை (–) (சரிக்கட்டப்பட்டவை)	–8014.15	–8547.75	–10986.33
மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி (+) / பற்றாக்குறை (–) (சரிக்கட்டப்பட்டவை)	–2.58%	–2.42%	–2.96%
மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP)	310757	353432	370943

2010 மார்ச் 19]

2009–2010 திருத்த மதிப்பீடு (5)	2010–2011 கணிப்புகள் (6)	2010–2011 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (7)	2011–2012 கணிப்புகள் (8)	2012–2013 கணிப்புகள் (9)
12.45%	10.49%	12.23%	11.56%	11.17%
–5019.54	35.68	–3396.45	267.02	3912.28
–9.32%	0.06%	–5.43%	0.37%	4.72%
39.03%	–0.29%	20.94%	–1.85%	–30.21%
–12860.45	–12288.95	–16222.13	–14466.28	–12952.25
–3.23%	–2.73%	–3.72%	–2.96%	–2.37%
397964	450474	436846	487996	547336

*****

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS